Date: 23.09.2025
OS/No. 196/2024 (118/2014)
PW1- மல்லிகா, க/பெ. குப்பன்

**<u>குறுக்குவிசாரணை தொடர்ச்சி</u>**

எனது தம்பி மணி திருமணம் செய்த போது அவர் நல்ல மனநிலையில் இருந்தார் என்றால் சரிதான். அவருக்கு இரண்டு குழந்தைகள் என்றால் சரிதான். முதல் மனைவி செல்வி இரண்டு குழந்தைகள் பிறந்த பின்னர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி மணி சோகமாக இருந்ததால் நாங்கள் தான் பார்த்து இரண்டாவது மனைவியான செல்வியை திருமணம் செய்து வைத்தோம் என்றால் நாங்கள் பார்த்து திருமணம் செய்து வைக்கவில்லை. நான் இரண்டு திருமணத்திற்கும் சென்றேனா என்றால் சென்றேன். இரண்டாவது மனைவி செல்வியுடன் மணிக்கு குழந்தைகள் ஏதேனும் பிறந்ததா என்றால்விக்னேஷ் என்ற மகன் உள்ளார். அவர் எங்களுடன் வந்து சென்று உறவுமுறையில் இல்லை. மேற்படி இரண்டாவது மனைவி செல்வியும் மணியுடன் வாழவில்லை என்றால் சரிதான். இரண்டாவது மனைவி செல்வி மணியைவிட்டுவிட்டு சென்றதற்கு காரணம் அவருக்கு மனநிலை சரியில்லாமல் போனதால்தான் சென்றார் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கை போட்ட தேதியில் இருந்து 5 வருடத்திற்கு முன்னரே எனது தம்பி மணிக்கு மனநிலை சரியில்லாமல் போய்விட்டது என்றால் வழக்கு தாக்கல் செய்த தேதியில் இருந்து சுமார் 2 வருடங்களுக்கு முன்பு மனநிலை சரியில்லாமல் போனது. நான் தாக்கல் செய்துள்ள தாவா சொத்தில் காண்பிக்கப்பட்டுள்ள சொத்தைத்தவிர வேறு ஏதேனும் சொத்துக்கள் உள்ளது என்றால் இல்லை. நான் வழக்கு போடுவதற்கு முன்பே எனது தம்பி மூன்று வீடு, 1 ஏக்கர் கொண்ட நிலத்தில் ஒரு கிணறும் மற்றும் 1/2 ஏக்கர் கொண்ட நிலத்தில் ஒரு கிணற்றையும் எனது தம்பி விற்றுவிட்டார். நான் வழக்கு போடும்

போதுதான் மேற்படி விற்றது போக 5 ஏக்கர் நிலம் உள்ளது என்று எனக்கு தெரியவந்தது என்றால் சரிதான். மேற்படி மூன்று வீடு, 1 ஏக்கர் கொண்ட நிலத்தில் ஒரு கிணறும் மற்றும் 1/2 ஏக்கர் கொண்ட நிலத்தில் ஒரு கிணறு ஆகியவற்றை நான் இந்த வழக்கின் சொத்துப்பட்டியலில் காண்பிக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி எனது தம்பி மணி மூன்று வீடு, 1 ஏக்கர் கொண்ட நிலத்தில் ஒரு கிணறும் மற்றும் 1/2 ஏக்கர் கொண்ட நிலத்தில் ஒரு கிணற்றை விற்றது சரி என்பதால்தான் அந்த சொத்துக்களை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். ஆனால் அந்த சொத்தை எனது தம்பி விற்றது எனக்கு தெரியாது. மூன்று வீடு, 1 ஏக்கர் கொண்ட நிலத்தில் ஒரு கிணறும் மற்றும் 1/2 ஏக்கர் கொண்ட நிலத்தில் ஒரு கிணற்றை எனது தம்பி விற்று விட்டார் அது எனக்கு தெரியாது என்று நான் தாக்கல் செய்த தாவா வழக்கு மற்றும் நிரூபண ஆணையுறுதி ஆவணத்தில் நான் சொல்லவில்லை என்றால் நான் சொன்னேன். மூன்று வீடு, 1 ஏக்கர் கொண்ட நிலத்தில் ஒரு கிணறும் மற்றும் 1/2 ஏக்கர் கொண்ட நிலத்தில் ஒரு கிணறு சொத்துக்களை கிரையம் பெற்ற நபர்களை நான் இந்த வழக்கில் சேர்த்து வழக்கு போடவில்லை என்றால் சரிதான். எனது தந்தை மற்றும் தாயார் ஆகியோர் இறந்தபோனதற்கான இறப்புச்சான்றிதழ் மற்றும் நான் வாரிசுதாரர் என்பதற்கு வாரிசுச்சான்று ஏதும் நான் இந்த தாவாவில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள தாவா சொத்தினை எனது தம்பி மணி மற்றும் அவரது மகள்கள் ஆகியோர்கள் தான் அனுபவித்து வருகிறார்கள் என்றால் தவறு மேற்படி தாவா சொத்து எனக்கும் மற்றும் எனது தம்பி ஆகிய எங்கள் இருவருக்கும் சரிபாகம் உள்ளது. 2010ம் ஆண்டுவரை நிலத்தில் விளைந்த மகசூலை எனக்கு எனது தம்பி கொடுத்து வந்தார் என்று நான் எனது தாவாவில்

சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது தம்பி மனநிலை சரியிருந்த வரையில் கொடுத்தார் அதன் பின்னர் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் இந்த வழக்கை 2014ம் ஆண்டு தான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். நான் பாகம் கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பினை நான் கொடுத்தேனா என்றால் எனது தம்பி மற்றும் அவரது இரண்டு மகள்களுக்கும் சேர்த்து கொடுத்தேன். அந்த வழக்கறிஞர் அறிவிப்பினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வக்கீலிடம் கொடுத்தேன். ஊரில் நான் பஞ்சாயத்து ஏதும் வைத்து பாகம் பிரிக்கச் சொல்லி கேட்டேனா என்றால் இல்லை.

(குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/- M.C.Arun
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்